Dinamalar (Trichy Edition) 31-1-2013

# தமிழக பேராசிரியருக்கு விருது



சுந்தரராமன்

**சென்னை:** கொடைக்கானலில் உள்ள விண் இயற்பியல் மையத்தில், உயர்கல்வி மாணவர்களுக்கு விண்ணியல் பற்றிய உயர் கல்வி பயிற்சி ஆண்டுதோறும் மே மாதத்தில் அளிக்கப்படுகிறது. மேலும் பி.இ., பிடெக், எம்.எஸ்சி., போன்ற படிப்புகளும் இங்கு கற்பிக்கப்படுகிறது. இந்த மையத்தில் பணி புரியும் விஞ்ஞானிகள் தமிழ்நாடு, கேரளா, கர்நாடக மாநிலங்களில் அறிவியல் மற்றும் பொறியியல் கல்லுாரிகளுக்கு நேரில் சென்று பயிற்சி அளித்து வருகின்றனர்.

இந்த ஆண்டு இந்திய-அமெரிக்க உயர்கல்வி மாநாடு ஐதராபாத்தில் நாளை முதல் 3 நாட்களுக்கு நடக்கிறது. இதை இண்டஸ் பவுண்டேசன் என்ற ஆந்திர அரசு அமைப்பு நடத்துகிறது. இந்த மாநாட்டில் இந்திய, அமெரிக்க விஞ்ஞானிகள் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்கின்றனர்.

மாநாட்டின் இறுதியில் பல்வேறு இனங்களில் விருது வழங்கப்படும். சிறந்த பேராசிரியராக தேர்வு செய்யப்பட்டுள்ள கொடைக்கானல் விஞ்ஞானி கே. சுந்தரராமனுக்கும் விருது வழங்கப்படுகிறது.

அமெரிக்காவில் உயர் கல்வி படிக்க விரும்பும் மாணவர்களுக்கு இந்த மாநாடு பெரிதும் உதவியாக இருக்கும். மாநாட்டை பற்றிய விவரங்கள், www.indus.org என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.